## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 58. ராஜா கோபீசந்த்

செல்வத்தின் செழிப்பில் சீரழியும் பல குடும்பங்களுக்கு இவரது வாழ்க்கை ஒரு கலங்கரைவிளக்கம் ஆகிறது.ஒரு குழந்தையின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அதன் தாயின் கையில் இருப்பதை வரலாறு உணர்த்தும். திருந்தாத தன் மக்களை ஆன்மீகம் மூலம் மட்டுமே பொறுமையுடன் திருத்த முடியும் என்று வரலாறு கூறுகிறது.மேலும் பூர்வ ஜென்ம வாசனைகளை அனுபவித்தே ஆக வேண்டும்.ஆனால் பெற்றோர்களே பிள்ளைகளின் சீரழிவுக்குக் காரணமாக இருக்கும் போது என்ன செய்ய முடியும்?

வட பாரத தேசத்தில் காஞ்சன்பூரை ஆண்ட அரச குடும்பத்தில் மைனாவதி என்ற அரசிக்குப் பிறந்த ஒரே மகன் தான் கோபீசந்த்.கணவன் இன்றி மிகவும் ஸ்ரத்தையாகத் தன் மகனை வளர்த்து, உரிய பருவத்தில் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார் மைனாவதி.

அரச வம்சத்தில் ஸ்ரீராமன் பிறந்து, மக்களைக் காப்பாற்றியது போல் தன் மகன் ஆட்சி செய்ய அவள் சதா வேண்டுவாள்.அவனும் மிக நல்ல முறையில் ஆட்சி செய்தான்.உரிய வயதில் அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்தார்கள்.வந்தது சனி!

### பூர்வ ஜென்ம வாசனை
கல்யாணம் ஆன அரசனுக்குப் புத்தி கெட்டது.தான் அரச வம்சம், தனக்குப் பல மனைவிகள் இருப்பதே பெருமை என்று கூறிக் கொண்டு பல பெண்களைத் தேடித் தேடி மணந்தான்.சதா அரண்மனையில் மனைவிகளுடன் காலம் கழித்தான்.மகனின் நிலையை எண்ணி எண்ணி வருந்தினார் தாய்.அறிவுரைக் கூறியும் பலனில்லை.இனி தான் தன் ஜென்மத்தைக் கடைத்தேற்ற வழி தேடி அவ்வூரில் வாழ்ந்த மஹான் ஸ்ரீமான் ஜாலந்தரிடம் ஸ்ரீராம மந்த்ரம் உபதேசம் பெற்று அதில் தன்னை ஈடுபடுத்தி மகனின் மாற்றத்துக்கும் ப்ரார்த்தனை செய்தாள்.

### குருவைக் கொன்ற மன்னன்
தினமும் தன் குருவைத் தெடிச் சென்று, அவருக்குப் பூஜைகளில் கைங்கர்யம் செய்வதும், உணவு அளித்து வருவதும் மைனாவதியின் முக்கிய பணிகள்.அதைத் தவறாகப் பேசினாள் முதல் ராணி.மனைவியின் வார்த்தையை நம்பிய அரசன் ஒற்றன் மூலம் தன் தாய் தினமும் ஜாலந்தரிடம் சென்று வருவதை எண்ணி, தாயின் ஒழுக்கத்தில் தப்பு கற்பித்து, குருவை ஒருநாள் அரண்மனைக்கு அழைத்து,

வீரர்கள் மூலம் அவரைக் கட்டிக் கிணற்றுள் போட்டு மூடியும் விட்டான்.

பத்து தினங்கள் தன் குருவைக் காணாத ப்ராதான சிஷ்யர் கானேபா மைனாவதியிடம் முறையிட்டான்.தன் குரு அரண்மனைக்குச் சென்று வரவே இல்லை என்றான்.அம்மையாருக்கு மிக மிக பயம் ஏற்பட்டது.தன் மகனின் செய்கையினால் குருவுக்கு பாதிப்பு உண்டோ என்று கலங்கினாள்.காலம் சென்றது.சுமார் 12 ஆண்டுகள் கழிந்தன.

தேய்ந்து போன சந்தனக்கட்டை
இக்காலத்தில் கோபீசந்த்தின் வாழ்வில் பல மாற்றங்கள். மனைவிகளுக்குள் சக கிழத்தி சண்டைகள், பிள்ளைகளுக்குள் அரச உரிமை ப்ரச்சனைகள் என ஒரே குழப்பத்திலும் கலக்கத்திலும் வாழ்ந்து ஓய்ந்து பல பாடங்கள் கற்றான்.தன் தாயின் பொறுமையும் ஆன்மீக சக்தியும் தனக்கும் உதவுவதை அவன் புரிந்து கொண்டான்.

**பாவ மன்னிப்பு**
அன்று மைனாவதி ஆழ்ந்த த்யானத்தில் இருக்கிறார்.த்யானம் முடிந்து கண் விழித்த போது எதிரில் கோபீசந்த் கண்ணீர் வழிய நிற்பதைக் காண்கிறாள்.

**"அம்மா! பாவத்துக்கு வேதத்தில் மன்னிப்பு இல்லை.அதைச் செய்யத் தூண்டிய அறியாமைக்கு மன்னிப்பு உண்டு.உன் குருவைக் கொன்றது நானே! என்னை மன்னித்து விடுக!"** என்று தாயின் பாதங்களில் வீழ்ந்து அழுதான்.

வாழ்க்கையின் ஓட்டமும் சோதனைகளும் செய்த பாவத்தின் வீர்யமும் தாயின் பக்தியும் அவனுள் இத்தனை மாற்றங்களைக் கொண்டு வந்தன.

**"மகனே! அது எமக்கும் தெரியும்! உன் பூர்வ ஜென்ம வாசனையால் இத்தவற்றைச் செய்தாய்! அதன் பலனை நீ அனுபவிப்பதை யார் தடுக்க முடியும்?!"** - மைனாவதி.

**குருவைப் பார்த்த சிஷ்யன்**
அன்று ஸ்ரீராம நவமி.
அரண்மனையில் கோபீசந்த் தாயுடன் வ்ரதம் இருக்கிறான்.இரவில் பூஜைகள் முடிந்ததும் ஊராரை அழைத்துத் தன் மகன் செய்த பாவத்தை மைனாவதி எடுத்துக் கூறினார்.அதன் பின் கிணற்றைத் திறக்கமாறு கூறினார்.மக்கள் கூடி அக்கிணற்றை அழுதபடியே திறந்தனர், மண்ணை அகற்றினர்.ஆழ்ந்த விழிப்புணர்வில் தன் பாவத்தின் மூல காரணமான அறியாமையை அழிக்க வேண்டி கோபீசந்த் ராம

நாமத்தை உச்சரித்துக் கொண்டு இருக்க, ஆழ்கிணற்றின் உள்ளே சமாதி நிலையில் ஸ்ரீமான் ஜாலந்தர் அமர்ந்திருக்கிறார்.அவர்தான் சித்தர் ஆயிற்றே!

அவரைக் கண்ட தாயும் மகனும் சரணம் புகுந்து பாவ மன்னிப்பு வேண்டினர்.
**"மகனே! உன் ஜென்ம வாசனையில் எமக்கும் பங்கு உண்டு.அது தீர்ந்தது.உன் தாய் எமது ஆன்மீக பலத்தில் மிக்க நம்பிக்கை உடையவர்.அவருக்கு அடியேனின் உடல் சாகவில்லை என்பதும் தெரியும்! இனி நீ கவலை ஒழித்து வாழ்க, மக்களைக் காத்திடுக!"** - குரு

**"ஸ்வாமி! லௌகீக வாழ்க்கை போதும்! அடியேன் செய்த பாவத்துக்குப் பரிகாரம், அரச போக வாழ்வைத் துறந்து சதா சன்னியாசியாக அலைய வேண்டும், ஆன்மீக நெறியைப் பரப்ப வேண்டும்! இது என் தாயின் வேண்டுகோளும் ஆகும்!"** - கோபீசந்த்

அதைக் கேட்ட குரு அவனுக்கு மந்த்ரோபதேசமும் சன்னியாசமும் அளித்தார்.தேசத்தைத் தன் நல்ல மகன் ஒருவனுக்கு அளித்து விட்டு மைனாவதியும் கோபீசந்தும் ஆன்மீகப் பணியில் ஈடுபட்டு சமூஹ மாற்றத்துக்கு வழி செய்தனர்.இவரது தங்கை சம்பாவதி என்பவர் அண்ணனிடமே உபதேசம் ஆகி ஆன்மீகத்தில் ஈடுபட்டாராம்.

கோபீசந்த்தின் புகழை மஹான் கபீர் தாஸ் பல இடங்களில் பாடுகிறார். பற்றுக்களை விடுதல் என்பதை கோபீசந்த் மூலம் அறிய வேண்டும் என்பது வடதேசத்தார் வழக்கு!

ஹரி ஓம்!